STC.No.116/2025 **PW1.கணேசன்**
தேதி– 04.08.2025
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரிக்கு வருமானம் வரக்கூடிய சொத்துக்கள் உள்ளதா என்றால் சொந்த வீடு இல்லை, சொத்து உள்ளதா என்று எனக்கு தெரியாது. வருமானம் வரக்கூடிய சொத்து இல்லாத மற்றும் சொந்த வீடு இல்லாத நபருக்கும் நான் காசோலை தொகையை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது வீட்டில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி மூன்று நான்கு வருடம் எனக்கு பழக்கம். இந்த தொகைக்கு முன்பு எதிரிக்கு கைமாற்று கடன் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். அந்த தொகையை திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். ரவி சாஸ்திரி என்பவர் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். இந்த தொகைக்கு முன்பு எதிரி பெற்றதாக சொல்லப்படும் தொகைக்கு ஆவணங்கள் பெற்றேனா என்றால் இல்லை. எதிரி காசோலை கொடுக்கும்போது அதை பார்த்தேன் என்றால் பார்த்தேன் எதிரி என் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்தார்.

2. காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் Signature Differs என்ற காரணத்தினால் நிரப்பப்பட்டது. எதிரி நன்கு வழக்கமான நபர் என்ற நிலையில் காசோலையை நான் பார்த்ததாக கூறும் நிலையில் காசோலையில் அவரது கையொப்பம் இல்லை என நான் கேட்டு இருப்பேன் என்றும், அவ்வாறு கேட்காத பட்சத்தில் நான் சொல்ல சொன்னது போல் எதிரி பணம் வாங்கவில்லை என்றால் நான் கேட்டதற்கு அவர் இவ்வாறு தான் கையொப்பம் செய்வதாக கூறினார். இதற்கு முன்பு வரவு செலவு சரியாக இருந்த நிலையில், வங்கியில் இருந்து காசோலை

திரும்பிய பின்பு எதிரியை நேரில் சந்தித்து மேற்படி விபரத்தை குறித்து தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியின் மைத்துனர் அருண்குமார் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான்.

3. அருண்குமாருடன் எனக்கு வரவு செலவு இருந்தது என்றால் இல்லை. எனக்கும், அருண்குமாருக்கும் வரவு செலவு இருந்தது என்றும் வங்கியின் மூலம் வட்டி வசூல் செய்துள்ளேன் என்றும் தற்போது எங்களுக்குள் வரவு செலவு இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி கையொப்பமிடாத காசோலையை அருண்குமாரிடமிருந்து பெற்று நானே கையொப்பம் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அருண்குமாரை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. இந்த காசோலை தவிர்த்து வேறு ஆவணங்கள் வாங்கினேனா என்றால் இல்லை. இதிருந்தே நான் அருண்குமாரியிடம் கையொப்பமிடாத காசோலையை வாங்கி கையொப்பமிட்டு எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

Sd/-Thiru.S.Amalanatha Kamalakannan
J.M, F.T.C(M.L),Uthamapalayam